பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 15 வெள்ளிக்கிழமை 01.10.2021 கதிர் 194

## மேலும் 597 பேர் பூரண குணமடைவு

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 597 பேர் பூரண குணமடைந்து இன்று வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இதையடுத்து, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 லட்சத்து 58 ஆயிரத்து 85 ஆக அதிகரித்துள்ளது.

☞2

# 41 நாள்களின் பின்னர் திறக்கப்பட்ட இலங்கை!

## அரச, தனியார் பஸ்கள் மாகாணங்களுக்குள் சேவையில்



இலங்கையில் அமுல்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச்சட்டம் இன்று அதிகாலை 4 மணி முதல் தளர்த்தப்பட்டுள்ளது.

எனினும், மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடு அவ்வாறே தொடரும் என்பதுடன், நாடு முழுவதும் இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரையில் தினமும் பயணக் கட்டுப்பாடு அமுலில் இருக்கும்.

கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில்கொண்டு கடந்த ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி முதல் நாடு முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

இந்நிலையில் தற்போது கொரோனாத் தொற்றுப் பரவல் நிலைமை சற்று குறைவடைந்துள்ளதால், இன்று முதல் நாட்டை இறுக்கமான கட்டுப்பாடுகளுடன் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்தது.

நாட்டைத் திறந்தாலும்

☞2

# சிறுவர் தினம் கறுப்புத் தினமே!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஐ.நா. அலுவலகத்துக்கு முன் போராட்டம்






(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஒக். 01

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகரின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்துக்கு முன்னால் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

☞2

## வழமைக்குத் திரும்பியது யாழ்ப்பாணம்



(இ.கலையமுதன்)

நாடு முழுவதும் இன்று அதிகாலை முதல் ஊரடங்கு தளர்த்தப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் வழமைக்கு திரும்பியதைத் அவதானிக்க முடிந்தது.

வர்த்தக நிலையங்கள், பொதுச்சந்தைகள் உட்பட பல நிறுவனங்கள் தத்தமது வழமையான செயற்பாடுகளுக்குத் திரும்பியிருந்தன.

யாழ். நகரில் பொதுமக்கள் அதிக அளவில் நடமாடியதை அவதானிக்க முடிந்ததுடன் பொலிஸார் கண்காணிப்பு

☞2

## வவுனியாவில் மேலும் மூவர் தொற்றால் சாவு!

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் மேலும் 49 பேருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதுடன், மூவர் மரணமடைந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.

☞2

## அவசரகாலச் சட்டத்தை உடன் நீக்கவேண்டும் கோட்டா அரசு

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

நெருக்கடியான கட்டங்களிலேயே அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்படும். ஆனால், ஒடுக்குமுறைக்காகவே இந்த சட்டத்தை தற்போதைய கோட்டாபய அரசு கொண்டுவந்தது. அது உடன் நீக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியமக்கள்சக்தி தெரிவித்துள்ளது.

அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன இது தொடர்பில்

☞2

## இலங்கை மீது 240 பேர் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் ஆவணப்படுத்தல்

### ஐ.நா. பொதுச் செயலாளர் அதிரடி



இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் ஆவணப்படுத்தியுள்ளார்.

இலங்கைக்கு எதிராக 45 நாடுகளில் வசிக்கும் சிவில் அமைப்புகளின்

☞2



## தாளையடியில் 372 கிலோ மஞ்சளுடன் இருவர் வசமாக சிக்கினர் பொலிஸிடம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., வடமராட்சி கிழக்குப் பகுதியில் 372 கிலோ மஞ்சளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தாளையடிப் பகுதியில், கடல் மார்க்கமாகக் கடத்தி வரப்பட்ட மஞ்சளை இருவர் வாகனத்தில்

☞2

## அனலைதீவிலும் இன்று பெருமளவு மஞ்சள் மீட்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., அனலைதீவில் வீடொன்றில் 20 மஞ்சள் மூடைகள் பதுக்கிவைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கடற்படை தெரிவித்துள்ளது.

அதனைப் பதுக்கி வைத்திருந்தனர் என்ற

☞2

## இலங்கை மீது............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறுப்பினர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என 240 பேர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களையே ஐ.நா. பொதுச் செயலாளர் ஆவணப்படுத்தியுள்ளார்.

பழிவாங்கல் மற்றும் அச்சுறுத்தல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஆவணப்படுத்தப்பட்ட அறிக்கையை மனித உரிமைகளுக்கான ஐ.நா. உதவிச் செயலாளர் பிராண்ட்ஸ் கெஹ்ரிஸ், ஐ.நா. மனித உரிமைகள் சபைக்குச் சமர்ப்பித்துள்ளார்.

இதில் பழிவாங்கல் தொடர்பான குற்றச்சாட்டுக்களே அதிகமாக உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இலங்கையில் மனித உரிமை பாதுகாவலர்கள், சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மீதான பழிவாங்கல்களையும் அச்சுறுத்தல்களையும் கண்காணிப்புகளையும் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபை வலியுறுத்தியுள்ளது.

## தாளையடியில் 372 .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்றிக்கொண்டு இருந்தபோது, மருதங்கேணிப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மஞ்சளை ஏற்றிக்கொண்டு இருந்த இருவரையும் கைதுசெய்துள்ளனர்.

அதன்போது 372 கிலோ மஞ்சள் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

## அனலைதீவிலும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கைது நடவடிக்கை இன்று அதிகாலை 3 மணிக்கு முன்னெடுக்கப்பட்டது என்று கடற்படை குறிப்பிட்டது.

நாவற்குழி மற்றும் அனலைதீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவரே கைதுசெய் யப்பட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்ட மஞ்சள் மூடைகள் வீடொன்றில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன எனக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்று கடற்படை குறிப்பிட்டுள்ளது.

## அவசரகாலச் சட்டத்தை ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஊடகங்களிடம் மேலும் கூறியதாவது:-

அரிசி மற்றும் நெல் வகைகளுக்கு விலையை நிர்ணயித்து 5 வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன. அதுமட்டுமல்ல தரவுகளைச் சேகரிப்பதற்கு பிரிகேடியர் ஒருவர் நியமிக்கப்பட்டார். விலையை நிர்ணயிப்பதற்கு மேஜர் ஜெனரல் ஒருவர் நியமிக்கப்பட்டார். ஆனாலும், உரிய தீர்வு கிட்டவில்லை. மேற்படி அதிகாரங்கள் போதாதென அவசரகாலச் சட்டமும் கொண்டுவரப்பட்டது.

ஆனால், இன்று என்ன நடக்கின்றது? அரிசி வகைகளின் விலையை அரிசி ஆலை உரிமையாளர்கள் நிர்ணயிக்கின்றனர். கோட்டாபய அரசு வேடிக்கை பார்க்கின்றது.

ஊரடங்குச் சட்டத்தை ஏற்கனவே நகைச்சுவையாக்கிய இந்த அரசு, தற்போது அவசரகாலச் சட்டத்தையும் நகைச்சுவையாக்கியுள்ளது - என்றார்.

## வழமைக்குத் .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பணியில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஊரடங்கு நீக்கப்பட்ட நிலையில் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி உள்ளூர் பஸ்கள் இயங்க ஆரம்பித்துள்ளதுடன் மாகாணங்களுக்குள்ளே பஸ் சேவைகள் இயங்குகின்றன.

## வவுனியாவில் மேலும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில வெளியாகியுள்ளன.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 49 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், கொரோனாத் தொற்று காரணமாக வவுனியாவில் நேற்றும் மரணமடைந்துள்ளனர்.

## சிறுவர் தினம் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி, இன்று முற்பகல் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அண்மையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சிறுவர்கள் பலர் காணாமல்போயுள்ள நிலையில், இந்தச் சிறுவர் தினம் கறுப்புத் தினமே என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வெளியே அரச புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டு கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர் என்பது அவதானிக்கப்பட்டது.

## மேலும் 597 பேர் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாட்டில் இதுவரை 5 லட்சத்து 17 ஆயிரத்து 377 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம், கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 12 ஆயிரத்து 906 ஆக அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 41 நாள்களின் பின்னர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒன்றுகூடல்கள், கூட்டங்கள் உள்ளிட்ட பல விடயங்களுக்குத் தொடர்ந்தும் கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ள காலப் பகுதியில் சுகாதார ஒழுங்குவிதிகளைப் பின்பற்றி நடந்துகொள்ளுமாறு அதிகாரிகள் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை, இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் மற்றும் தனியார் பஸ்கள் என்பவை இன்று காலை முதல் சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக மாகாணங்களுக்குள் சேவையில் ஈடுபடுகின்றன.


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் ‘காலைக்கதிர்’ சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கொடூரர்களின் இராச்சியம்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கொடூரம் – குரூரம் – பற்றிய சில தகவல்களை – உண்மைகளை – ஒரு நிறுவனம் தொகுத்து வெளியிட்டுள்ளது. அதில் சில இங்கு தரப்படுகின்றன.

✦ நடேசு குகநாதன் – 2009 யுத்த முடிவில் அரச படைகளிடம் சரணடைந்தவர். நான்கு வருட சிறைவாசம் மற்றும் புனர்வாழ்வின் பின்னர் 2013 இல் விடுவிக்கப்பட்டார். ஆனால் மூன்று மாதங்களில் திரும்பவும் கைதானார். மீண்டும் எட்டு வருடங்களின் பின்னர் குற்றச்சாட்டு ஏதும் சுமத்தப்படாமலேயே சில வாரங்களுக்கு முன்னர் விடுவிக்கப்பட்டு இருக்கிறார்.

✦ மல்கம் டிரோன் –இதே சட்டத்தின் கீழ் 2008இல் கைதானார். 13 வருடங்கள் தடுப்புக் காவலில் இருந்த பின்னர் அவருக்கு எதிராக போதிய சாட்சியங்கள் இல்லை என்று தெரிவித்து அண்மையில் விடுதலையானார். போதிய சாட்சியங்கள் இல்லாத இந்த வழக்கு கடந்த டிசெம்பரில் அவர் விடுதலை செய்யப்படும் வரை ஒன்பது மேல் நீதிமன்ற நீதிபதிகளின் கைகளுக்கு மாறி வெறுமனே இழுபட்டிருக்கின்றது. அவ்வளவு காலம் காரணமின்றி அவர் தடுப்புக்காவலில் வாடியிருக்கின்றார்.

✦ சந்திரபோஸ் செல்வச்சந்திரன் – வழக்குத் தொடரப்பட்டு சுமார் 14 ஆண்டுகள் தடுப்புக்காவலில் வாடிய பின்னர் சுத்தவாளியாகக் காணப்பட்டு விடுவிக்கப்பட்டார். அவருக்கு எதிராக இரண்டாவது குற்றப் பத்திரம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அந்தக் குற்றம் நிகழ்ந்த போது அவர் தடுப்புக்காவலில் இருக்கின்றார் என்று தெரியாமலேயே குற்றம் சுமத்தப்பட்டது. கைது செய்யப்பட்ட போது அவருக்கு வயது 27. விடுதலையான போது அவர் 41வயதில் புற்றுநோயாளி. விடுதலையாகி ஒன்றரை வருடத்தில் காலமானார் – இளமையை அநியாயமாகச் சிறைக் கம்பிகளின் பின்னால் தொலைத்த அந்த இளைஞர்.

✦ திருமதி வசந்தி ரகுபதி சர்மா – 1999 டிசெம்பரில் கைதானார். 15 வருடங்கள் தடுப்புக்காவலில் வாடிய பின்னர் 2015 சுத்தாவளி என விடுவிக்கப்பட்டார்.

✦ திருமதி அந்தனி சந்திரா – 2008 இல் இந்தச் சட்டத்தில் கைதாகி 7 வருடங்களின் பின்னர் சுத்தவாளி என்ற தீர்ப்பில் விடுவிக்கப்பட்டார்.

இப்படி இந்தக் கொடூரமான – மிருகத்தனமான –காட்டுமிராண்டித்தனமான – சிங்களப் பேரினவாத சட்டத்தின் கீழ் பலநூறு தமிழர்களுக்கு எதிராக வருடக்கணக்காக குற்றங்களை சிங்கள அரசு இழைத்துள்ளது. இப்படி பாதிக்கப்பட்டோர் பட்டியலும், அவர்கள் தொலைத்த காலங்கள் பற்றிய அளவீடும் நீண்டவை.

இங்கு குறிப்பிடப்பட்ட திருமதிகள் வசந்தி சர்மாவும், அந்தனி சந்திராவும் முறையே 15 மற்றும் 7 வருடங்கள் தடுப்புக்காவலில் அநியாயமாக தடுத்து வைக்கப்பட்டனர். இருவருமே தலா மூன்று பிள்ளைகளின் தாய்மார். அந்தப் பிள்ளைகளின் வாழ்வும் இதனால் அவலப் பட்டுப் போய்விட்டது. இந்தச் சட்டம் நீடிப்பதற்கு ராஜபக்ஷக்கள் மட்டுமல்ல, அவர்களுக்கு கூஜா தூக்கும் நீதியமைச்சர் வரை அரசியல்வாதிகள் எல்லோரும் பொறுப்பு.

இத்தகைய – மனித குலத்திற்கு எதிரான – கொடூரத்தையே சட்டமாக ஏவிவிடும் இந்தக் கொடூரர்களை யார் தண்டிப்பார்கள்? சர்வதேச சமூகம் தான் பதில் தரவேண்டும்.

# ஞானசாரரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட மாட்டாது

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு



எந்தச் சந்தர்ப்பத்திலும் நாட்டில் அடிப்படைவாத தாக்குதல் நடத்தப்படலாம் என ஊடகங்களுக்கு கூறியமை சம்பந்தமாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட மாட்டாது என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எந்த வகையிலும் ஞானசார தேரரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வாக்குமூலத்தை பதிவு செய்யப் போவதில்லை எனவும், எனினும் கட்டாயம் புலனாய்வுப் பிரிவினர் அவரிடம் மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்வார்கள் என்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் ஊடகங்களிடம் கூறியுள்ளார்.

இவ்வாறு புலனாய்வுப் பிரிவினர் தேரரிடம் பெற்றுக் கொள்ளும் தகவல்களுக்கு அமைய அச்சுறுத்தல்கள் இருக்குமாயின் அது சம்பந்தமாக அமைச்சு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மிகவும் பாரதூரமான தகவலை வெளியிட்ட ஞானசார தேரரிடம் விசாரணைகளை நடத்துமாறு கத்தோலிக்க திருச்சபை உட்பட பல தரப்பினர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

சாதாரண நபர் ஒருவர் ஊடகங்களில் அல்லது சமூக வலைத்தளங்களில் இப்படியான பாரதூரமான தகவல்களை வெளியிட்டிருந்தால், அவரை பாதுகாப்புத் தரப்பினர் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்திருப்பார்கள் எனவும், ஞானசார தேரர் தொடர்பிலான பாதுகாப்பு தரப்பினரின் செயற்பாடுகள் அதிருப்தியையும், வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளன எனப் பல்வேறு தரப்பினரும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# தற்போதைய வெளிநாட்டு ஒதுக்கம் 500 கோடி அமெரிக்க டொலர்கள்

## மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தகவல்



இலங்கையின் தற்போதைய வெளிநாட்டு ஒதுக்கம் 500 கோடி அமெரிக்க டொலராகும் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

நுண் பொருளாதார மற்றும் நிதி அமைப்பு ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான ஆறு மாத கால பாதைக்கான கட்டமைப்பு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலினால் இன்று (வெள்ளிக்கிழமை) இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதனையடுத்து, உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வெளிநாட்டு நாணய பரிமாற்றங்களைக் கண்காணிப்பதற்கான ஜனாதிபதி செயலணி தமது கடமைகளைத் தொடர்ந்தும் செயற்படுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கிராமத்துடனான உரையாடல்; பருத்தித்துறையில் நடந்தது

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத்திட்டத்திற்கமைவாக, பிரதமரின் வழிகாட்டுதலில், நிதியமைச்சர் மற்றும் ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷவால், இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கும் 30 லட்சம் ரூபா அபிவிருத்திக்காக ஒதுக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 35 கிராமங்களுக்குமான களவிஜயம் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதனால் நேற்று வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

இந்த விஜயத்தில், கிராமங்களுக்கான உட்கட்டுமானம், வாழ்வாதாரம், சூழலியல் திட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இந்த விஜயத்தில், பிரதேச செயலாளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அலுவலக அதிகாரிகள், பருத்தித்துறை, கரவெட்டி தொகுதி இணைப்பாளர்கள் மற்றும் கிராம அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.






# கூட்டாட்சி நீதிமன்றம் அதிரடி

## பழங்குடியினருக்கான இழப்பீட்டை உறுதிப்படுத்திக் கொண்டது கனடா

குடும்பங்களில் இருந்து பிரிக்கப்பட்டு குடியிருப்பு பள்ளிகளில் பராமரிக்கப்பட்ட கனடா பழங்குடிச் சிறுவர்கள் மற்றும் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குமாறு கனடாமனிதஉரிமைகள்தீர்ப்பாயம்வழங்கிய உத்தரவை உறுதி செய்து கூட்டாட்சி நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஒவ்வொரு பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு 40,000 கனேடிய டொலர்களை இழப்பீடாக வழங்க வேண்டும் என கனேடிய மனித உரிமைகள்தீர்ப்பாயம்2016இல்தீர்ப்பளித்தது. சில விதிவிலக்குகளுடன், குழந்தைகளின் பெற்றோர் அல்லது தாத்தா பாட்டிகளும் இழப்பீடு பெற தகுதியுடையவர்கள் என்றும் தீர்ப்பாயம் கூறியது.

எனினும் இந்தத் தீர்ப்பை எதிர்த்து பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் அரசாங்கம் மேன் முறையீடு செய்தது. இந்த இழப்பீட்டுத் தொகையை வழங்க மத்திய அரசுக்கு பல மில்லியன் டொலர்கள் செலவாகும் என மேன்முறையீட்டில் தெரிவிக்கப்பட்டது.

பழங்குடியின குழந்தைகள் பிரிக்கப்பட்டு பராமரிப்புப் பள்ளிகளில் பலவந்தமாக இணைக்கப்பட்டதன் மூலம் அவர்களிடையே பாகுபாடு காட்டப்பட்டது என மனித உரிமைகள் தீர்ப்பாயத்தின் கண்டுபிடிப்புக்கள் சரியானதே. எனினும் இழப்பீட்டு உத்தரவு மிகைப்படுத்தல் என கனேடிய மத்திய அரசு வாதிட்டது.

எனினும் இந்த மேன்முறையீட்டை நிராகரித்து, மனித உரிமைகள் தீர்ப்பாயத்தின் உத்தரவை உறுதி செய்து கூட்டாட்சி நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதேவேளை, ட்ரூடோ அரசாங்கம் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கம் இந்ததீர்ப்பு குறித்து ஆராய்ந்து வருகிறது. அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் மார்க் மில்லர் தெரிவித்தார்.

இதற்கிடையில் பழங்குடி மக்களின் உரிமைகள் தொடர்பில் வழக்கு தொடர்ந்த பழங்குடி சிறுவர் மற்றும் குடும்ப பராமரிப்பு சங்கத்தின் நிர்வாக இயக்குநர் சிண்டி பிளாக்ஸ்டாக், இந்த தீர்ப்பு அரசாங்கத்தின் அனைத்து நயவஞ்சக வாதங்களையும் முழுமையாக நிராகரித்துள்ளது. இது பாதிக்கப்பட்டவர்களுக்கு கிடைத்த முழுமையான வெற்றி எனத் தெரிவித்தார்.

# ஆதிக்குடிகளிடம் ஒப்படைக்கப்பட்ட மழைக் காடுகள்



உலகிலேயே மிகவும் பழமையான வெப்பமண்டல மழைக் காடுகளான டெய்ன்ட்ரீ மழைக்காடுகள் ஆஸ்திரேலியாவிலுள்ள ஆதிக் குடிகளிடமே திரும்ப ஒப்படைக்கப் பட்டுள்ளன.

அரசுக்கும் ஆதிக்குடி சமூகத்துக்கும் ஏற்பட்ட ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தத்தின் கீழ் இந்த காடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஐ.நாவின் யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரிய இடமாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த மழைக் காடுகள் சுமார் 18 கோடி ஆண்டுகள் பழமையானவை. ஆதிக்குடிகள் பல தலைமுறைகளாக இங்கு வசித்து வருகின்றனர்.

தற்போதைய ஒப்பந்தத்தின்படி குயின்ஸ்லாந்து மாகாண அரசு மற்றும் ஈஸ்டர்ன் குக்கு யலாஞ்சி ஆதிக் குடி மக்கள் ஆகியோர் இந்த மழைக் காடுகளை ஒன்றாக நிர்வ கிப்பார்கள். கிரேட் பேரியர் ரீஃப் பவளத்திட்டை ஒட்டி இந்த மழைக் காடுகள் அமைந்துள்ளன.

ஆஸ்திரேலியாவின் மிகவும் பிரபலமான சுற்றுலா இடங்களில் இந்த மழைக் காடுகளும் ஒன்று.

# தடுப்பூசிக்கு எதிரான தகவல்களை நீக்கவுள்ளதாக யூடியூப் அறிவிப்பு

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாத்து கொள்வதற்காக மக்களுக்கு செலுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தடுப்பூசிகளையும் பற்றி தவறான தகவல்களை பரப்பும் உள்ளடக்கத்தை நீக்குவதாக யூடியூப் (YouTube) மீண்டும் அறிவித்துள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகள் ஆபத்தானவை மற்றும் ஆட்டிசம், புற்றுநோய் அல்லது கருவுறாமை ஆகியவற்றை ஏற்படுத்தும் காணொலிகள் அகற்றப்படும் என நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், தவறான தகவல்களை பரப்புவதன் மூலம் தடுப்பூசி போடுவதில் மக்கள் சந்தேகம் கொள்வதற்கு சமூக ஊடக தளங்கள் பெரும்பாலும் பொறுப்பாகும் என்றும் இந்த பிரச்சினையை தீர்க்குமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

இந்நிலையில் கூகிளுக்குச் சொந்தமான யூடியூப், கடந்த ஆண்டு முதல் கொரோனாத் தடுப்பூசிகளைப் பற்றி தவறான தகவல்களை பரப்பும் உள்ளடக்கத்திற்கு தடை விதித்தபோது, ஒரு லட்சத்து 30 ஆயிரம் காணொலிகள் அதன் தளத்திலிருந்து அகற்றப்பட்டன எனக் கூறியது. இதேவேளை தடுப்பூசிகள் தொடர்பான தனிப்பட்ட சாட்சியங்கள், தடுப்பூசி கொள்கைகள் பற்றிய உள்ளடக்கம், புதிய தடுப்பூசி சோதனைகள் மற்றும் தடுப்பூசி வெற்றி அல்லது தோல்விகள் பற்றிய வரலாற்று காணொலிகள் தளத்தில் இருக்க அனுமதிக்கப்படும் என நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஈக்வடார் சிறைக் கலவரம் உயிரிழப்பு 116 ஆக உயர்வு

தென் அமெரிக்க நாடான ஈக்வடாரில், சிறையில் ஏற்பட்ட கலவரத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 116ஆக உயர்ந்துள்ளது.

மேலும், 80பேர் படுகாயமடைந்துள்ளனர். இதில் 5 பேரின் தலை துண்டிக்கப்பட்டதாகவும் சிறைத்துறை தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகிறது.

ஈக்வடார் வரலாற்றில் மிக மோசமான சிறைச்சாலை படுகொலை என்று அதிகாரிகள் இந்த கலவரத்தினை விவரித்துள்ளனர்.

இத்தாக்குதலில் கத்திகள், துப்பாக்கிகள் மற்றும் வெடிபொருள்கள் பயன்படுத்தப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குயாஸ் மாகாணத்தில் உள்ள துறைமுக நகரமான குயாகுவில் இருக்கும் லிட்டரல் சிறையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இரு தரப்பு கைதிகள் இடையே மோதல் ஏற்பட்டது. பின்னர் இந்த மோதல் பெரும் கலவரமாக வெடித்தது.

இதில் முதற்கட்டமாக லாஸ் வெகோஸ் மற்றும் லாஸ் கேனரஸ் என்று அழைக்கப்படும் இருதரப்பு கைதிகள் கத்தி உள்ளிட்ட கூர்மையான ஆயுதங்களால் ஒருவரையொருவர் சரமாரியாக தாக்கிக்கொண்டனர். இது கலவரமான மோதலில் 24பேர் உயிரிழந்ததோடு 48 பேர் படுகாயம் அடைந்தனர்.

கிட்டத்தட்ட 5 மணி நேரப் போராட்டத்திற்குப் பின்பே கலவரம் அடக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனைத்தொடர்ந்து ஜனாதிபதி கில்லர்மோ லாசோ, ஈக்வடாரின் சிறை அமைப்பில் அவசரகாலச் சட்டத்தை பிறப்பித்தார், பொலிஸ்துறை மற்றும் இராணுவ வீரர்களை மற்ற அதிகாரங்களுக்கிடையில் சிறைச்சாலைகளில் ஈடுபடுத்த அரசாங்கம் அனுமதித்தது.

ஈக்வடாரில் மொத்தமுள்ள 60 சிறைகளில் 29 ஆயிரம் கைதிகளை மட்டுமே அடைத்து வைக்க முடியும் என்கிற சூழலில் அதைவிட அளவுக்கு அதிகமான கைதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இது சிறைகளில் பல்வேறு பிரச்சினைகளுக்கு வித்திடுகிறது. குற்ற வழக்குகளில் சிறைகளில் அடைக்கப்படும் போதைப் பொருள் கடத்தல்காரர்கள், கொலையாளிகள், கொள்ளை கும்பலைச் சேர்ந்தவர்கள் தனிதனி குழுக்களாக பிரிந்து அடிக்கடி குழு மோதல்களில் ஈடுபடுகின்றனர்.

இது ஒருபுறமிருக்க ஆயிரக்கணக்கான சிறைக் கைதிகளை கண்காணிக்க வெறும் 1,500 சிறைக் காவலர்கள் மட்டுமே பணியில் இருக்கிறார்கள். இதனால் அங்குள்ள பல சிறைகளில் சிறை அதிகாரிகளை விட கைதிகளின் கையே ஓங்கியுள்ளது.

# கூடங்குள அணுக்கழிவு மையத்துக்கு அனுமதி; மத்திய அரசுக்கு சீமான் கண்டன அறிக்கை

கூடங்குளத்தில் மேலுமொரு அணுக்கழிவு மையம் அமைக்க கொடுத்துள்ள அனுமதியை ஒன்றிய அரசு திரும்பப்பெற வேண்டும் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இது குறித்து நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் விடுத்துள்ள அறிக்கையில்,

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் மூன்றாவது மற்றும் நான்காவது அணு உலைகளின் அணுக்கழிவுகளைக் கூடங்குளத்திலேயே சேமித்து வைக்க இந்திய அணுவாற்றல் ஒழுங்குமுறை ஆணையம் அனுமதி வழங்கியுள்ளன பேரதிர்ச்சியளிக்கிறது. அணு உலையையே முற்றுமுழுதாக அகற்ற வேண்டும் என்று மக்கள் தொடர்ந்து போராடி வரும் நிலையில், அணுக்கழிவுகளைக் கூடங்குளத்திலேயே சேமித்து வைக்கும் வகையில், அடுத்தடுத்து அணுக்கழிவு மையங்களை அமைக்க ஒன்றிய அரசு அனுமதித்து வருவதென்பது வன்மையான கண்டனத்திற்குரியது.

மக்கள் நலத்தையும், மண்ணின் வளத்தையும் நாசப்படுத்தக் கூடிய கூடங்குளம் அணு உலை செயல்படத் தொடங்கிய காலம்தொட்டே நாம் தமிழர் கட்சி அதனை கடுமையாக எதிர்த்து வருவதுடன், அணுஉலைக்கழிவுகளை என்ன செய்வீர்கள்? என்ற கேள்வியையும் எழுப்பி வந்தது. 1,000 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் ஓர் அணு உலையில் ஆண்டொன்றுக்குச் சராசரியாக 27 ஆயிரம் கிலோ எடையுள்ள கழிவுகள் வெளியாகின்றன.

இவ்வாறு வெளியாகும் அணுக்கழிவுகள் அணு உலைக்குள்ளேயே சேமித்து வைக்கப்படுகின்றன. ஆனால் அவற்றினை 7 வருடங்களுக்கு மட்டுமே அங்குவைத்திருக்கமுடியும். அதன்பிறகு, அங்கிருந்து வெளியேற்றி தற்காலிக அணுக்கழிவு மையத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். இத்தகைய அணுக்கழிவுகள் என்பது ஏறத்தாழ 48 ஆயிரம் ஆண்டுகள் கதிர்வீச்சுத் தன்மையுடன் இருக்கக்கூடியவை.

இக்காலகட்டத்திற்குள் ஏதாவது ஒரு பேரிடர் ஏற்பட்டு அணுக்கழிவுகளின் கதிர்வீச்சுகள் வெளிப்பட்டால் தமிழகமே மிகப்பெரிய பேரழிவைச் சந்திக்க நேரிட்டு, உயிர்கள் வாழவே தகுதியற்ற நிலமாகத் தமிழ் நாடு மாறிவிடும். இதனைக் கருத்தில்கொண்டே கடந்த 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் கூடங்குளத்தில் தற்காலிக அணுக்கழிவு மையம் அமைக்க முடிவு செய்தபோதே அதனை நாம் தமிழர் கட்சி கடுமையாக எதிர்த்துப் போராட்டங்களை முன்னெடுத்தது.

ஆனால், மக்கள் எதிர்ப்பினைத் துளியும் பொருட்படுத்தாது எதேச்சதிகாரப் போக்குடன் கூடங்குளத்தில் முதல் மற்றும் இரண்டாம் அணு உலைக்கான தற்காலிக அணுக்கழிவு மையத்தை அமைக்க அனுமதித்தது மத்திய அரசு. நிரந்தர அணுக்கழிவு மையத்தைக் கர்நாடக மாநிலம், கோலாரில் பயன்பாட்டில் இல்லாத பழைய தங்கச் சுரங்கங்களில் அமைப்போம் என்று 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்திய அணுவாற்றல் துறை அறிவித்தபோது, அதற்கு அம்மாநிலக் கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து அம்முயற்சி முற்றாகக் கைவிடப்பட்டது.

நிரந்தர அணுக்கழிவு மையம் அமைத்திட எந்த இந்திய மாநிலமும் ஒத்துக்கொள்ளாத நிலையில், எந்த இடத்தில் நிரந்தர அணுக்கழிவு மையம் அமைப்பது என்கின்ற எந்த முடிவினையும் இந்திய அணுவாற்றல் துறை இதுவரை எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



எனவே, எதிர்காலத்தில் கூடங்குளத்தையே நிரந்தர அணுக்கழிவு மையமாக மாற்றும் பேராபத்தும் ஏற்படக்கூடும். மேலும் நிரந்தர அணுக்கழிவு மையம் வைப்பதற்கான தொழிநுட்பத்தை இதுவரை இந்தியா பெறவில்லை. உலகளாவிய அளவில் அறிவியல் வளர்ச்சி அடைந்த வல்லாதிக்க நாடுகளே அணுக்கழிவுகளை எவ்வாறு கையாள்வது என்பது தெரியாமல் திகைத்து நிற்கும்போது அணுக்கழிவுகளைக் கையாள்வதற்கான அறிவியல் இன்னும் வளராத இந்தியா, தமிழத்தில் அடுத்தடுத்து தற்காலிக அணுக்கழிவு மையங்களை அமைத்து வருவது, நேரடியாகத் தமிழர்கள் மீது மத்திய அரசு தொடுக்கின்ற சூழலியல் போரேயாகும்.

ஸ்டெர்லைட் ஆலை, நியூட்ரினோ மையம், அணு உலை, அணுக்கழிவு மையம் எனப் பேராபத்து நிறைந்த அழிவுத்திட்டங்களையெல்லாம் தமிழ்நாட்டின் மீது திணிப்பதன் மூலம் இந்தியாவின் குப்பைத்தொட்டியாகத் தமிழ்நாடு பயன்படுத்தப்படுகிறது என்கின்ற எண்ணம் ஒவ்வொரு தமிழனின் உள்ளத்திலும் குமுறல்களாக வெளிப்படுகிறது.

ஆகவே, கூடங்குளத்தில் அடுத்தடுத்து அணுக்கழிவு மையம் அமைக்கின்ற முயற்சியினை உடனடியாகக் கைவிட வேண்டுமெனவும், கடந்த ஜூன் மாதம் தொடங்கப்பட்ட ஐந்து மற்றும் ஆறாவது அணு உலை விரிவாக்கக் கட்டுமானப் பணிகளை உடனடியாக நிறுத்தவேண்டுமெனவும் ஒன்றிய அரசினை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மாநிலத்தை ஆளும் தி.மு.க. அரசு நாடாளுமன்றத்தில் தமக்குள்ள எண்ணிக்கை பலத்தினைப் பயன்படுத்திக் தமிழகத்திற்கு பேராபத்தை விளைவிக்கக் கூடிய கூடங்குளம் அணு உலையினை நிரந்தரமாக மூட வழிவகை செய்ய வேண்டுமெனவும் நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன், என்று தெரிவித்துள்ளார்.



## கொலம்பிய துணை ஜனாதிபதி இன்று இந்தியாவுக்கு விஜயம்

தென்னமெரிக்க நாடுகளில் ஒன்றான கொலம்பியாவின் துணை ஜனாதிபதியும், வெளியுறவுத்துறை அமைச்சருமான மார்த்தா லூசியா ராமிரெஸ், நான்கு நாள்கள் சுற்றுப்பயணமாக இந்தியாவிற்குச் சென்றுள்ளார். இன்று அதிகாலை டெல்லிக்குச் சென்று சேர்ந்த அவரை, இந்திய வெளியுறவுத்துறை அதிகாரிகள் விமான நிலையத்திற்குச் சென்று வரவேற்றனர்.

தனது இந்திய வருகை குறித்து டுவிட்டரில் பதிவிட்ட மார்த்தா, ‘கொலம்பியாவில் தடுப்பூசிகளைத் தயாரிக்க வழிவகை செய்யும் ஒரு முக்கிய ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக நாங்கள் இந்தியாவிற்கு வந்துள்ளோம்’ என்று பதிவிட்டிருந்தார். அவர் தனது நான்கு நாட்கள் சுற்றுப்பயணத்தின்போது, இந்தியா-கொலம்பியா நாடுகளுக்கிடையே அறிவியல், தொழிநுட்பம், தடுப்பூசித் தயாரிப்பு உள்ளிட்ட பல்வேறு முக்கிய விவகாரங்கள் தொடர்பாக இருதரப்புப் பேச்சு நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் டெல்லியில் இன்று இந்தியாவின் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடுவையும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரையும் கொலம்பியாவின் துணை ஜனாதிபதி மார்த்தா லூசியா சந்தித்துப் பேசியுள்ளார்.



## தூய்மை இந்தியா திட்டம் 2.0 பிரதமர் மோடி ஆரம்பித்தார்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நகர்ப்புறத் தூய்மை இந்தியா திட்டம் 2.0 வினை இன்று தொடங்கிவைத்தார். அத்தோடு, நகர்ப்புற மாற்றம் மற்றும் புத்துயிருக்கான அடல் மின் 2.0 திட்டத்தையும் ஆரம்பித்துவைத்துள்ளார். இந்த நிகழ்ச்சியில் இந்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி மற்றும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்தியாவின் அனைத்து நகரங்களையும் ‘குப்பை இல்லாத’ மற்றும் ‘நீர் பாதுகாப்பான’ நகரங்களாக மாற்றுவதே இந்தத் திட்டங்களின் நோக்கங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன.

## இந்தியாவில் சற்றே அதிகரிக்கும் கொரோனாத் தொற்றுப் பாதிப்பு

இந்தியாவில் கடந்த சில தினங்களாக தினசரி கொரோனா பாதிப்புக் குறைந்து வந்து, இருபதாயிரத்துக்குள் அடங்கியிருந்த நிலையில், நேற்று திடீரென அதிகரித்து தினசரிப் பாதிப்பு எண்ணிக்கை மீண்டும் இருபதாயிரத்தைக் கடந்துள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

நேற்றுக் காலை 8 மணியுடன் முடிந்த 24 மணி நேரத்தில் இந்தியா முழுவதும் 23,529 பேருக்கு கொரோனாப் பாதிப்பு உறுதியாகியிருந்தது. இந்த நிலையில், இரண்டாவது நாளாக இன்றும் கொரோனாப் பாதிப்பு ஏறுமுகத்தில் உள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 26,727 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அமைச்சகத்தரவுகள் தெரிவிக்கின்றன. தொற்றுப் பாதிப்பிலிருந்து மேலும் 28,246 பேர் குணமடைந்துள்ள நிலையில் கொரோனாத் தொற்றுக்கு ஒரே நாளில் 277 பேர் உயிரிழந்துள்ளனர். தொற்றுப் பாதிப்புடன் சிகிச்சை பெறுபவர்கள் எண்ணிக்கை இரண்டு லட்சத்து 75 ஆயிரத்து 224 ஆக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இதுவரை தொற்றுப் பாதித்தவர்கள் எண்ணிக்கை 3,37,66,707 ஆக உயர்ந்துள்ளது. அதேவேளை தொற்றில் இருந்து குணம் அடைந்தவர்கள் எண்ணிக்கை 3, 30,43,144 ஆக உள்ளது. கொரோனாத் தொற்றுக்கு இதுவரை உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 4,48,339 ஆக அதிகரித்துள்ளது.

# கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தில் ஹரிஸ் எம்.பி. எதிர்க்கட்சியிலிருந்து சாதிக்கின்றார்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் தெரிவிப்பு



கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தில் ஹரிஸ் எம்.பி. எதிர்க்கட்சியில் இருந்து சாதிக்கின்றார் என்றால் ஆளுங் கட்சியின் பங்காளிகளாக இருந்து கொண்டு உங்களால் செய்ய முடியாது என்றால் நீங்கள் ஆளுங்கட்சியில் எந்த இடத்தில் வைத்துப் பார்க்கப்படுகின் றீர்கள். ஆட்சிக்குவந்து மூன்றேநாள்களில் கல்முனைவடக்குப்பிரதேசசெயலகத்தைத் தரமுயர்த்தித் தருகிறோம் எனச் சொல் லியிருந்தார்கள், ஆனால் இன்று எத் தனை நாள்கள் போய்விட்டன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞான முத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

கடந்த ஆட்சியில் நாங்கள் எதிர்க்கட் சியில் இருந்தோம், ஹரிஸ் எம்.பி. ஆளுங்கட்சியின் பிரதியமைச்சராக இருந்து முட்டுக்கட்டை போட்டார். ஆனால் இப்போது அவர் எதிர்க் கட்சியில் தான் இருக் கின்றார். ஆனால், ஆளுங்கட்சியில் இருக் கும் நம் தம்பிமார் இன் னும் அவரைச் சொல்லி மக்களைப் பேய்க்காட்டக் கூடாது என்றும் தெரிவித் துள்ளார்.

கல்முனை வடக்குப் பிரதேச செயலக தரமுயர்த்தல் விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தரமுயர்த்தல் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முற்றுமுழுதாகச் செயற்பட் டது. ஆனாலும் அது நடக்க முடியாமல் போனது உண்மைதானே தவிர அதற்கு நாங்கள் ஒருபோதும் தடையாக இருக்க வில்லை.

அப்படிப் பார்த்தால் ஆட்சிக்கு வந்து மூன்றே நாள்களில் கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தித் தருவேன் என்று வியாழேந்திரன் சொல்லியிருந்தார். ஆனால் இன்று எத் தனை நாள்கள் போய்விட்டன.

நாங்களாவது அன்று எதிர்க்கட்சியில் இருந்து ஏதோவொருவகையில் உடன்பாட் டுடன் சில சில விடயங்களைச் செய்தி ருந்தோம். கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் தரமுயர்த்த முடியாமற் போனதென்பது துரதிஷ்டம்.

ஆனால், ஆளுங்கட்சியில் பங்காளி களாக இருக்கின்றோம், நாங்கள் சொல் லுகின்ற விடயங்களை எல்லாம் அரசாங் கத்திலுள்ளவர்கள் செய்வார்கள், அரசி யல் கைதிகளையெல்லாம் விடுதலை செய்து தருவோம் என்றெல்லாம் வாய் கிழிய பேசிய வார்த்தைகளை மக்கள் மறக்கவில்லை. எனவே நாங்கள் தடையாக இருந்தோம் என மக்களிடம் பொய்களைச் சொல்லி பொய்கள் மூலமாக அரசியல் செய்வது நிலைக்காது. கடந்த காலங்களில் இந்தப் பொய்களுக்குரிய பாடம் புகட்டப் பட்டது. ஆனால் தேர்தல் மோசடி மூல மாக வெற்றி பெற்றனர்.

நாங்கள் தமிழ் மக்கள் சார்ந்த விட யங்களில் அன்றும் இன்றும் என்றும் எப்போதும் உறுதியாக இருக்கின்றோம்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தில் இப்போதும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் அவர்கள் தடையாக இருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அன்று நல்லாட்சியில் ஹரிஸ் அவர்கள் ஆளுந்தரப்பில் ஒரு பிரதி அமைச்சராக இருந்தவர். அவர்களின் கட்சியிலுள்ளவர் களெல்லாம் அமைச்சர்களாக இருந்தவர் கள் அதனால் தடைகள் பலவற்றைப் போட்டிருக்கலாம்.

ஆனால் இப்போது ஆளுங்கட்சியின் பங்காளிகளாக மட்டக்களப்பில் இருவர் இருக்கின்றார்கள். ஹரிஸ் எம்.பி. இப்போது எதிரணியில் இருக்கின்றார். ஹரிஸ் எம்.பி. எதிர்க்கட்சியில் இருந்து சாதிக்கின்றார். ஆளுங்கட்சியின் பங்காளிகளாக இருந்துகொண்டு உங்க ளால் செய்ய முடியாது என்றால் ஆளுங் கட்சியில் நீங்கள் எந்த இடத்தில் வைத்துப் பார்க்கப்படுகின்றீர்கள் என்ற விடயத்தைச் சிந்திக்க வேண்டும்.

நல்லாட்சியில் ஆளுந்தரப்பில் இருந்து அவர் முட்டுக்கட்டை போட்டார் என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் இன்று அரசாங்கத்தின் பக்க மாக இருவர் இருக்கின்றீர்கள். இருந்து விட்டு ஹரிஸ் எம்.பி. இப்போதும் தடையாக இருக்கின்றார் என்ற நீங்கள் சொன்னால் ஹரிஸின் அரசியல் என்ன உங்களின் அரசியல் என்ன. எனவே இவையெல்லாம் மக்களின் காதுகளில் பூச்சுத்துகின்ற கருத்துகளாகவே இருக்க முடியும் என்று தெரிவித்தார்.

## பொது மக்களை பாதுகாக்கும் பணிகளை முன்னெடுக்கும் மட்டு போக்குவரத்து சபை

கிழக்கு மாகாணத்தில் கடந்த 41 நாள்களாக முடக்கப்பட்டிருந்த போக்குவரத்துத் தடை இன்று காலை முதல் அரசாங்கத்தினால் நீக்கப்பட்டுள்ளதையடுத்து பொது மக்களை பாதுகாக்கும் பணிகளை சுகாதார அமைச்சின் சுற்று நிருபத்திற்கமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பல நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டன.

இதன் ஒரு கட்டமாக மட்டக்களப்பு இலங்கை போக்குவரத்து சபை டிப்போவில் கடந்த 14.08.2021 அன்று இனம் காணப்பட்ட 35 கொரானாத் தொற்றாளர்களையடுத்து மட்டக்களப்பு இலங்கை போக்குவரத்து சபையின் செயற்பாடுகள் முற்றாக முடக்கப்பட்டி ருந்தன.

எனினும் இன்று காலை முதல் போக்குவரத்துத் தடை அரசாங்கத்தினால் நீக்கப்பட்டுள்ளதை யடுத்து மட்டக்களப்பு நகரின் பஸ் நிலையமும் மற்றும் மட்டக்களப்பு இலங்கை போக்குவரத்து சபை டிப்போவில் போக்குவரத்தில் ஈடுபடவுள்ள பஸ்களுக்கு தொற்று நீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இங்கு பொது மக்கள் ஒன்று கூடும் இடங்கள் பஸ்கள் என முக்கிய இடங்களில் சுகாதாரத் தரப்பினரால் தொற்று நீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.





## திருக்கோவில் பிரதேசத்தில் சேதனப் பசளை விற்பனைக்காக பொதி வேலைகள் ஆரம்பம்

அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலகத் தின் சமுர்த்திப் பிரிவின் ஊடாக உற்பத்தி செய்யப் பட்ட சேதனப் பசளை விற்பனைக்காக பொதி செய் யும் வேலைகள் நேற்று ஆரம்பித்து வைக்கப் பட்டன.

சேதனப் பசளை பொதி செய்யும் வேலைத்திட்ட மானது சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் பி.கமலேஸ்வரன் தலைமையில் நேற்று முனையூர் கிராமத்தில் இடம்பெற்று இருந்தது.

சமுர்த்தி திணைக்களத்தின் சௌபாக்கியா வாரத் தினை முன்னிட்டு சேதனப் பசளை உற்பத்தியாளர் களை ஊக்குவிக்கும் அரசின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்தின் கீழ் திருக்கோவில் பிரதேசத்தில் சேதனப் பசளை உற்பத்திகள் அதிகளவில் விவசாயிகளினால் ஆர்வத்துடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

திருக்கோவில் பிரதேசத்தில் முனையூர் கிராமத்தில் சமுர்த்திப் பயனாளி ஒருவர் உற்பத்தி செய்த சேதனப் பசளை விற்பனைக்காக பொதி செய்து தயார் படுத் தும் வேலைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டிந்தன.

## 14 வயது மாணவி துஷ்பிரயோகம் 65 வயதான ஒருவர் கைது

14 வயதான பாடசாலை மாணவியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி னார் என்ற சந்தேகத்தின் பேரில் 65 வயதானவர் கைது செய்யப்பட்டுள் ளார். மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கவிரவில பாக்றோ தோட்டத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட நபர், ஹற்றன் நீதி வான் ஆர். ராமமூர்த்தி முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட் டார்.

சந்தேகநபரான திருமணம் முடித்த 65 வயதான அந்த நபரை எதிர் வரும் 13ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். பாதிக்கப்பட்ட அந்தச் சிறுமி, பரிசோதனைக்காக, டிக்கோயா – கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சாதனையுடன் டெஸ்ட்டில் சதமடித்தார் இந்திய வீராங்கனை ஸ்மிரிதி மந்தனா




இந்திய பெண்கள் கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இதில் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை இந்தியா 1-2 என்ற கணக்கில் இழந்தது. இதனைத் தொடர்ந்து இரு அணிகளுக்குமிடையிலான ஒரேயொரு பகலிரவு டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கராரா ஓவல் மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இந்தப் போட்டியில் முதலில் களம் இறங்கிய இந்திய அணியின் தொடக்க வீராங்கனைகள் ஸ்மிரிதி மந்தனா மற்றும் பாலி வர்மா இருவரும் சிறப்பான அடித்தளத்தை அமைத்தனர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 93 ரன்னாக இருந்தபோது பாலி வர்மா 31 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

மறுபுறம் ஸ்மிரிதி மந்தனா 51 பந்துகளில் அரைச்சதத்தைக் கடந்தார். இந்த அரைச்சதத்தின் மூலம், 2013 க்குப் பிறகு மகளிர் டெஸ்ட் கிரிக்கெட்டில் எடுக்கப்பட்ட 39 அரைச் சதங்களில், குறைந்த பந்துகளில் அரைச் சதம் எடுத்தவர் என்கிற பெருமை அவருக்குக் கிடைத்தது. இந்திய அணி 44.1 ஓவர்களில் 132 ஓட்டங்களை எடுத்திருந்தபோது மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டது.

இரண்டாவது நாள் ஆட்டத்திலும், தனது சிறப்பான துடுப்பாட்டத்தைத் தொடர்ந்த ஸ்மிரிதி மந்தனா, 170 பந்துகளில் தனது முதல் டெஸ்ட் சதத்தை எடுத்தார். 216 பந்துகளில், 22 பவுண்டரிகள், 1 சிக்சருடன் 127 ஓட்டங்களை எடுத்து அவர் ஆட்டமிழந்தார்.

25 வயதான ஸ்மிரிதி மந்தனா, ஆஸ்திரேலியாவில் டெஸ்ட் சதமடித்த முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையைப் படைத்துள்ளார். வெளிநாடுகளில் சதமடித்த ஐந்தாவது இந்திய வீராங்கனை, ஆஸ்திரேலியாவில் டெஸ்ட் கிரிக்கெட்டில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அதிக ஓட்டங்களை எடுத்த வீராங்கனை என்கிற பெருமைகளையும் அவர் தனதாக்கியுள்ளார்.

# 11 ஆவது முறையாக பிளேஓப் சுற்றுக்கு முன்னேறியது சென்னை சூப்பர் கிங்ஸ்!



ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் 14ஆவது சீசனின் 2ஆம் பகுதியின் நேற்றைய லீக் போட்டியில் ஹைதராபாத் அணியை வீழ்த்தி சென்னை சூப்பர் கிங்ஸ் அணி பிளே-ஓப் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

மூன்று முறை சம்பியனான சென்னை சூப்பர் கிங்ஸ் அணி அடுத்தசுற்றுக்கு முன்னேறுவது இது பதினோராவது முறையாகும். கடந்த ஆண்டு சென்னை அணி லீக் சுற்றுடன் வெளியேறியது. அதனையும், தடைசெய்யப்பட்டிருந்த இரு வருடங்களையும் தவிர்த்து மற்ற எல்லா சீசன்களிலும் சென்னை அணி பிளே-ஓப் சுற்றை எட்டியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

வேறு எந்த அணியும் இத்தனை முறை லீக் சுற்றைத் தாண்டியதில்லை என்பதோடு, சூதாட்டப் புகாரில் சிக்கிய சென்னை அணி 2016, 2017 ஆம் ஆண்டுகளில் இடைநீக்கம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# ஐ.பி.எல். தொடரிலிருந்து கிறிஸ் கெயில் விலகினார்

தற்போதைய ஐ.பி.எல். தொடரில் 11 போட்டிகளில் விளையாடியுள்ள பஞ்சாப் கிங்ஸ் அணி 4 வெற்றி, 7 தோல்விகளுடன் 8 புள்ளிகளைப் பெற்று பட்டியலில் 6 ஆவது இடத்தில் உள்ளது. லீக் போட்டிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில் இனி வரும் அனைத்துப் போட்டிகளும் பஞ்சாப் அணிக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. இந் நிலையில், பஞ்சாப் கிங்ஸ் அணியின் அதிரடி ஆட்டக்காரர் கெயில் தொடரில் இருந்து விலகுகிறேன் எனவும் அறிவித்துள்ளார்.

தொடர்ந்து கடந்த சில மாதங்களாக மேற்கிந்தியத் தீவுகள் அணி, கரீபியன் பிறீமியர் லீக் தொடர், ஐ.பி.எல். தொடர் என கொரோனாத் தடுப்புக் கட்டுப்பாடுகளுக்குள் இருந்துள்ளதால் மனரீதியில் ஏற்பட்டுள்ள அயர்ச்சியிலிருந்து மீண்டு புத்துணர்வு பெற முடிவு செய்துள்ளேன் எனவும், ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு சிறப்பாக விளையாடுவதில் கவனம் செலுத்தவுள்ளேன் எனவும் ஐ.பி.எல். தொடரில் இருந்து விலகுகிறேன் எனவும் கிறிஸ் கெயில் தெரிவித்துள்ளார்.

கெயிலின் தற்போதைய துடுப்பாட்டம் சிறப்பான நிலையில் இல்லாததாலும் இனிவரும் போட்டிகளில் அணி நிர்வாகமே அவரை விளையாடும் பதினொருவரில் இணைப்பது சந்தேகமென்பதாலுமே அவர் இந்த வெளியேறும் முடிவை எடுத்தார் என உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இலங்கை ஏ அணியின் பயிற்சியாளராக மீண்டும் ருமேஷ் ரத்நாயக்க நியமனம்

பாகிஸ்தான் ஏ அணிக்கு எதிராக நடைபெறவுள்ள கிரிக்கெட் தொடருக்காக, இலங்கை ஏ அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக இலங்கை தேசிய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ருமேஷ் ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். பாகிஸ்தான் ஏ மற்றும் இலங்கை ஏ அணிகளுக்கு இடையிலான தொடர், எதிர்வரும் மாதம் 28 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

ருமேஷ் ரத்நாயக்க இதற்கு முன்னர், இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராகவும் செயற்பட்டுள்ளார். அதேநேரம், இலங்கை ஏ அணியின் பயிற்றுவிப்பாளராகவும் இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் பணியாற்றியுள்ளார். தற்போது, இவர் கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் உள்ள இலங்கை அணியின் உயர் செயற்திறன் மையத்தில் வேகப்பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளராக செயற்பட்டுவருகின்றார்.

பாகிஸ்தான் ஏ அணி, இலங்கைக்கு எதிர்வரும் ஒக்டோபர் 21 ஆம் திகதி வருகை தரவுள்ளது. இரு அணிகளும் 2 நான்கு நாள்கள் கொண்ட டெஸ்ட் போட்டிகள் மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளன. இரண்டு நான்கு நாள்கள் கொண்ட போட்டிகள், கண்டி, பல்லேகலை கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளதோடு, ஒரு நாள் போட்டிகளுக்கான மைதானம் இதுவரை உறுதிசெய்யப்படவில்லை. எனினும், இந்தப்போட்டிகள் ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



# வர்த்தக கிரிக்கெட் சங்கத்தின் புதிய தலைவராக மோட் நிறுவனத்தின் நலின் விக்ரமசிங்க தெரிவு

வர்த்தக கிரிக்கெட் சங்கத்தின் புதிய தலைவராக மோட் நிறுவன குழுமத்தின் பொது முகாமையாளரான நலின் விக்ரமசிங்க தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.




வர்த்தக கிரிக்கெட் சங்கத்தின் 104 ஆவது வருடாந்த சந்திப்பில் அதன் 42 ஆவது தலைவராக ஓய்வு பெற்ற வங்கியாளரான நலின் விக்ரமசிங்க ஒருமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். 2021-2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவர் குறித்த சங்கத்தின் தலைவராகக் கடமையாற்றவுள்ளார்.

இதற்கு முதல் டேவிட் பீரிஸ் நிறுவனத்தின் ரொஹான் திசாநாயக்க தலைவராக செயற்பட்டிருந்தார்.

சங்கத்தின் உப தலைவர்களாக பெயார் பெர்ஸ்ட் காப்புறுதி நிறுவனத்தின் மஹேஷ் டி அல்விஸ், சிங்கர் நிறுவனத்தின் துஷான் அமரசூரிய, டிரெண்டக்ஸ் நிறுவனத்தின் சிரோ குணதிலக்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொதுச் செயலாளராக ஸ்டபோர்ட் மோட்டார் நிறுவனத்தின் தரிந்திர களுபெருமவும் பொருளாளராக டி.எப்.சி.சி. வங்கியின் அச்சிந்த ஹேவநாயக்கவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# வவுனியாவில் நிரந்தர நியமனம் கோரி ஒன்றிணைந்த பட்டதாரிகள் போராட்டம்







நிரந்தர நியமனம் கோரி ஒன்றிணைந்த பட்டதாரிகள் சங்கத்தினரால் வவுனியா பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது காலத்தை வீணடிக்காதே, நிரந்தர நியமனத்தை உடன் வழங்கு, கதைத்தது காணும் உறுதிமொழியை நிறைவேற்று, 20 ஆயிரம் ரூபா வாழ்க்கை செலவுக்கு போதுமா? போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பாதாகைகளை ஏந்தியவாறு, கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில் –

பட்டதாரிகளிற்கு ஒரு வருட பயிற்சிக்காலம் நிறைவடைந்தும் அரசாங்கம் சரியான நியமனத்தை வழங்கவில்லை. செப்டெம்பர் 3 ஆம் திகதி ஒரு வருட பயிற்சிக்காலம் முடிவடைந்த பின்பும் எமக்கான நியமனம் வழங்கப்படாமல் இருப்பது என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

அது மாத்திரமன்றி எங்களது பட்டதாரி பயிலுநர்கள் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் சமுர்த்தி போன்றவற்றுக்கு வாரத்தில் 7 நாள்களும் எதுவித மேலதிக கொடுப்பனவுகளும் இன்றி அழைக்கப் படுகின்றனர். இது ஒரு பாரிய குறைபாடாக இருக்கின்றது.

தற்போதைய நாட்டின் பொருளாதார நிலைமையில் 20 ஆயிரம் ரூபாவை கொண்டு எவ்வாறு ஒரு குடும்பத்தை கொண்டு நடாத்த முடியும். இந்நிலையில் தற்போதைய வேடிக்கையான அரசாங்கம் எங்களின் பயிற்சிக்காலத்தை 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவுடன் மேலும் 06 மாதம் நீடித்திருப்பதானது எங்களது வாழ்க்கையில் மேலும் கஷ்டத்தை ஏற்படுத்துவதாகவே இருக்கின்றது. பல்வேறு போராட்டங்களின் ஊடாக கிடைக்கப்பெற்ற இந்த நியமனத்தை ஒரு வரப்பிரசாதமாக நினைத்துக் கொண்டு இருந்தோம். ஆனால் இந்த அரசாங்கம் எங்களை கஷ்டத்துக்குள்ளாக்கி போராட்டங்களை தொடருவதற்கு தள்ளியுள்ளது.

எனவே இந்த அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிக்கு ஏற்ப செப்டெம்பர் 3 என்ற திகதியின் படி எங்களுக்கான பயிற்சி நியமனத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

## ஹப்புத்தளை பிரதேச சபையின் பாதீடு 19 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது!

ஹப்புத்தளை பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட அறிக்கை 19 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஹப்புத்தளை பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட அறிக்கை பிரதேச சபையின் தவிசாளர் கந்தசாமி கண்ணாவால் நேற்று (வியாழக்கிழமை) சபையில் முன்வைக்கப்பட்டது.

இந்த வரவு செலவுத் திட்ட அறிக்கை நிறைவேற்றப்பட்டமை இலங்கையின் பிரதேச சபைகளின் வரவு செலவுத் திட்ட அறிக்கைகளில் முதன்முதலில் வரவு – செலவுத் திட்ட அறிக்கை நிறைவேற்றப்பட்ட பிரதேச சபையாக ஹப்புத்தளை பிரதேச சபை உள்ளது. இந்த வாக்கெடுப்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஆறு உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 6 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் 7 உறுப்பினர்களும் 2022 ஹப்புத்தளை பிரதேச சபைக்கான வரவு செலவுத் திட்ட அறிக்கைக்கான ஆதரவை வழங்கியிருந்தனர் மக்கள் விடுதலை முன்னணியின் ஓர் உறுப்பினர் ஹப்புத்தளை பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட அறிக்கைக்கு எதிராக வாக்களித்தார்.

மேற்படி ஹப்புத்தளை பிரதேச சபையின் 2022 இற்கான வரவு செலவுத் திட்ட அறிக்கை 19 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## முக்கிய உடன்படிக்கையில் இந்திய நிறுவனம் கைச்சாத்து



கொழும்பு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தை கூட்டாக அபிவிருத்தி செய்யும் உடன்படிக்கை ஒன்றில் இந்தியாவின் அதானி குழுமம் அதன் உள்ளூர் வர்த்தக பங்காளியான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் மற்றும் இலங்கை துறைமுக ஆணையகம் ஆகியவற்றுடன் நேற்று (வியாழக்கிழமை) கையெழுத்திட்டுள்ளது.

குறித்த உடன்படிக்கை 70 கோடி அமெரிக்க டொலர்களை தாண்டிய முதலீடாகும் எனக் கூறப்படுகின்றது.

மேலும், மேற்கு முனையம் 35 வருட கட்டுமானம் மற்றும் பரிமாற்றம் ஆகியவற்றின் அடிப்படையில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

அதானி குழுமத்தின் அறிக்கையின்படி, மேற்கு துறைமுக முனையம் ஆயிரத்து 400 மீற்றர் நீளம் மற்றும் 20 மீற்றர் ஆழம் கொண்டதாக இருக்கும் என்பதுடன் பெரிய கொள்கலன்களைக் கையாள இது ஒரு பிரதான தளமாக அமையும் எனக் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் முதல் முறையாக இந்தியத் துறைமுக நிறுவனம் ஒன்று கூட்டு முயற்சியில் 51 வீதமான பங்கைக் கொண்டிருக்கும் திட்டமாக இது அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# “ஆபத்தான சோதனைகளை எதிர்கொண்டேன்” ஹரின் பெர்னாண்டோவின் உருக்கமான பதிவு





நான் எட்டு மணிநேர நீண்ட, தீர்க்கமான அறுவைச் சிகிச்சையை இன்று (வெள்ளிக்கிழமை) எதிர்கொள்ளப் போகின்றேன். இந்த ஆண்டு மே மாதத்தில், நான் வாழ்க்கையில் இதேபோன்ற தீர்க்கமான சோதனைக்கு உட்பட்டேன் என்று ஹரின் பெர்னாண்டோ தனது பேஸ்புக் பதிவில் தெரிவித்துள்ளார்.

இந்த குறுகிய காலத்தில், ஒவ்வொரு நாளும் ஒரு சவால் மட்டுமல்ல, வாழ்க்கையே ஒரு சவால் என்பதை நான் அனுபவத்தால் புரிந்துகொண்டேன். இதன் மூலம் நான் வாழ்க்கையில் நிறைய பாடங்களைக் கற்றுக் கொண்டேன்.

நான் ஆபத்தான சோதனைகளை எதிர்கொண்டேன். என் வாழ்க்கையில் பல விடயங்கள் தொடர்பாக சோதனைகள். சவால்கள் மற்றும் அபாயங்களை எதிர்கொள்வதிலிருந்து நான் ஒருபோதும் பின்வாங்கவில்லை. ஆனால், வாழ்க்கை தொடர்பான ஒரு சோதனையை எதிர்கொள்வது சவாலானது மற்றும் ஆபத்தானது. வாழ்க்கையில் இரண்டு முறை ஒரே சவாலை எதிர்கொள்வது விசித்திரமானது. – என்றும் அவர் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

என்னைப் பற்றி விசாரித்த, எனக்காக பிரார்த்தனை செய்து, தங்களின் நம்பிக்கைகளின்படி மற்றும் இயற்கையில் நம்பிக்கை வைத்திருந்தவர்களுக்காக, எனக்காக பிரார்த்தனை செய்த அனைவருக்கும் என் இதயப்பூர்வமான நன்றி. மக்களின் ஆதரவு என்னை மேலும் பலப்படுத்துகிறது. இதனை கடவுள் அல்லது இயற்கையின் தெய்வீக சக்தி என்று நினைக்கிறேன். இது எனக்கு மிக முக்கியமான இரண்டு தருணங்களில் சரியான நேரத்தில் எச்சரித்தது, நான் எந்த உடல் அசௌகரியத்தையும் உணரவில்லை என்றாலும். அது எவ்வாறு நடந்தது என்று என்னால் நம்ப முடியவில்லை. என்னை மேம்படுத்தும் மக்களின் வாழ்க்கையை மேலும் மேம்படுத்த என்னை அர்ப்பணிக்க வேண்டும். நான் என்றும் உண்மைக்காகவும் சரியான விடயத்துக்காகவும் துணை நின்றேன் என ஹரின் பெர்னாண்டோ தமது பேஸ்புக் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.10.2021இல் வெளியிடப்பெற்றது.